DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No. 412/2022**

| | | |
|---|---|---|
| Name | : | திரு,சாமித்துரை **Pw 3** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of October 2024.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல்துறையில், சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். எங்கள் காவல்நிலையத்தில் சுந்தரய்யா என்ற தலைமை காவலர் பணியில் இருந்து, சொக்கம்பட்டி அருகே பணியில் இருந்தபோது, விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்துவிட்டார். அவர் கடந்த 1997 ஆம் வருடம் காவல் துறையில் சேர்ந்தார். அவர் இறுதியாக வாங்கிய அடிப்படை சம்பளம் ரூபாய்.40,800/- ஆகும். மொத்த சம்பளம் ரூபாய். 56,992/- ஆகும். ம.சா.ஆ. 5 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது தான். இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க **எனக்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம்,**

**மற்றும் சுந்தரய்யா அவர்களின் இறுதி சம்பள பட்டியல் ஆகியவை ம.சா.ஆ. 8 வரிசை** ஆகும்.

**குறுக்குவிசாரணை**

சுந்தரய்யா இறக்கும்போது, ரூ.56,992/– ஊதியம்பெற்றுவந்தார், அவருக்கு லோன் வாங்கிய வகைக்கு கட்டாய பிடித்தம் ரூ.15,765/– செய்யப்பட்டது என்றால் சரிதான். அவர் இறக்கும்போது நிகர ஊதியம் ரூ.39,343/– பெற்றுவந்தார். அவர் விபத்தில் மரணம்அடையும் சமயம் அவரது வயது 57. அவர் ஓய்வு பெறும் சமயம் தலைமை காவலராக தான் ஓய்வு பெறுவார் என்றால் சரியல்ல, சிறப்பு உதவி ஆய்வாளராக ஓய்வு பெறுவார். சிறப்பு உதவி ஆய்வாளராக எத்தனை வருடம் பணிபுரிவார் என்பது அவரது பிறந்த தேதியை பார்த்து தான் சொல்ல இயலும்.

விபத்து சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நான் பார்வையிட்டுள்ளேன். விபத்து சமயத்தில் அவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் கிடையாது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் அவரது ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. விபத்தில் இறந்துபோன சுந்தரய்யாவிற்கு ஒரே மகன் உள்ளார் என்றால் சரிதான். காவல் அதிகாரி ஒருவர் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் அவரது வாரிசிற்கு வேலை கிடைக்கும் என்றால் அதற்கான வாய்ப்புள்ளது. சுந்தரய்யாவின் மகன் தனக்கு அந்த பணி வேண்டும் என கேட்டு மனு கொடுத்துள்ளார் என்றும் அது நிலுவையில் உள்ளது என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi